This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# சூரியன்

www.writersujatha.com

ஒன்பதாவது மாடியிலிருந்த தன் அலுவலகத்திலிருந்து மூன்றாம் மாடிக்கு வந்த ஆத்மா தன் மனைவியைப் பார்த்து வழக்கம்போல் சிரித்துவிட்டு, வழக்கம்போல் தன் அறைக்குச் சென்றான். அங்கிருந்தே “என்ன எழுதுகிறாய்?” என்றான்.

அங்கிருந்தே சிலேட்டைக் காட்டினாள். நெருக்கமாக அதில் “நித்யா நித்யா நித்யா நித்யா…”

“என்ன இது உன் பெயரையே எழுதிக்கொண்டிருக்கிறாய்?”

“பொழுதுபோக வேண்டும். அழித்து அழித்து ஆயிரம் தடவை எழுதிவிட்டேன்.”

“புத்தகம் ஏதாவது படியேன்.”

“நூலகத்தில் இருக்கும் முப்பது புத்தகங்களையும் நான்கு தடவை படித்தாகிவிட்டது.”

ஆத்மா சிரித்தான். சிரிப்பில் கொஞ்சம் அவநம்பிக்கை, கவலை… “இன்னும் கொஞ்ச நாட்கள்தானே?” என்றான்.

“எத்தனை நாள்?”

ஆத்மா இதற்குப் பதில் சொல்லாமல், “ரவி எங்கே?” என்றான்.

“கிழவரிடம் கதை கேட்கப் போயிருக்கிறான். உங்கள் பையனைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.”

“என்ன செய்தான்?”

“கவிதை எழுதுகிறான்.”

www.writersujatha.com

“என்னது!” ஆத்மாவின் முகம் திடீர் என்று விகாரமாயிற்று. “கவிதையா?”

“ஆம்!”

“காகிதத்திலா?”

“ஆம்.”

“சர்க்கார் காகிதத்திலா?”

“ஆம்.”